29th August 1961] [Sri C. Subramaniam]

என்ற நிர்ப்பந்தம் கிடையாது, விதி கிடையாது. இருக்கக் கூடிய இரட்டை மெம்பர் தொகுதிகளைப் பிரிப்பது என்ற பிரச்சினையில், ஆலோசனை சொல்வதுதான் சர்க்காரின் பொறுப்பு. ஆலோசனைப் பொறுப்பு மட்டுந்தான். இதிலே, '' adjournment motion '. ஆக வருவதற்கு இடமே கிடையாது. அதைப் பயன் படுத்திக் கொண்டு, எலெக்ஷன் கமிஷனைப் பற்றிக் குற்றம் சொல்லுவது மிகவும் வருந்தத் தக்கது. இனிமேல் இவ்வாறு செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : அரசாங்கம் நடு நிலைமை வகித்து, யோசனைக் கொடுத்திருந்தால், அது நலமாக இருந்திருக்கும். இதிலே எலெக்ஷன் கமிஷனைப் பற்றிய பிரச்சினையே கிடையாது.

THE HON. SRI C. SUBRAMANIAM : எலெக்ஷன் கமிஷன் உரிமையைப் பற்றிச் சொன்னார்கள், அதனால் நான் அது தவறு என்று சொன்னேன். எதிர்க்கட்சிக்குப் பாதகமாக இருக்கிறது, கட்சி சார்பில் கொடுத்தார்கள், அதை ஒத்துக்கொண்டு எலெக்ஷன் கமிஷன் நடந்து விட்டது என்று சொல்வதைக் கண்டிக்கிறேன். தயவுசெய்து இனிமேல், இது எலெக்ஷன் கமிஷனாக இருந்தாலும் சரி, நீதி மன்றங்களாக இருந்தாலும் சரி, ஜாக்கிரதையாகப் பேசவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : An adjournment motion should relate to an important matter and the matter should be urgent also. The matter raised by the hon. Member, Sri M. Kalyanasuudaram is no doubt important. But there does not seem to be any urgency. The subject is not so urgent as to warrant the adjournment of the business of the House to discuss it at once. This Government have no responsibility in the matter as required by Rule 50 (x) of the Assembly Rules as pointed out by Hon. the Leader of the House.

I, therefore, do not give consent to raise the matter.

III. ANNOUNCEMENTS

(1) BILL PASSED BY THE LEGISLATIVE COUNCIL.

DEPUTY SPEAKER : I have to announce to the House that the Madras Preservation of Private Forests (Amendment Bill), 1961 (L.A. Bill No. 25 of 1961) has been passed by the Legislative Council without any amendment.

(2) AMENDMENTS TO THE MADRAS LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) BILL, 1960.

I have also to announce to the House that notice of amendments to the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Bill, 1960 (L.A. Bill No. 8 of 1960) as amended by the Joint Select Committee should reach the Secretary to the Assembly before 5 p.m. on the 11th September 1961.

IV. AMENDMENT TO THE NOTIFICATION ISSUED WITH G.O. No. 2083, REVENUE, DATED 16TH MAY 1961 (LAID ON THE TABLE OF THE ASSEMBLY ON 17TH AUGUST 1961).

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

"That the following amendments be made to the notification issued with G.O. No. 2083, Revenue, dated 16th May 1961 relating to the scope of expression 'Electrical Undertakings' in the Madras State used in Revenue Department Notification II-1 No. 1450 of 1960, dated 27th September 1960 and circulated to Members on the 7th July 1961.

AMENDMENTS.

"In the Explanation to the amendment issued in G.O. No. 2083, Revenue, dated 16th May 1961.

(1) Omit—

(*a*) the words 'or private'; and

(*b*) item (ii); and

(2) renumber item (iii) as item (ii)."

The amendments were duly seconded.

DEPUTY SPEAKER : The amendments are before the House for discussion.

SRI M. KALYANASUNDARAM : அரசாங்க உத்திரவு 2083, ரெவின்யூ—தேதி 16—5—1961-ல் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்திற்கு நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதிலே தனியார் நடத்தக் கூடிய கம்பெனிகள், அரசாங்க மின்சார போர்டு ஆகியவைகள் தனிப்பட்ட கம்பெனிகளிடத்தில் வாங்கக்கூடிய மின்சாரப் பொருள்களுக்கு 2 சத விகிதம் விற்பனை வரி என்று விதிக்கப்பட்டிருக்கிறது. மின்சார போர்டு வாங்கக்கூடிய சாமான்களுக்கு விற்பனை வரியை 2 சத விகிதம் ஆகக் குறைப்பதைக்கூட நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய மின்சார அன்டர்டேகிங்ஸ் சம்பந்தமாகவும் இது அவசியந்தானா என்பது ஆலோசிக்க வேண்டிய விஷயம் என்பது என்னுடைய கருத்து. ஏன் அவர்களுக்கு இந்தச் சலுகை அவசியமில்லை என்கிறேன் என்றால் தனிப்பட்டவர்கள் அநேகமாக இரண்டு பெயரில் இரு கம்பெனிகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒன்று வேறாகவும், இன்னொன்று வேறாகவும் இருக்கலாம். ஆனால் ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்தம் உடையனவாக இருக்கின்றன. குறிப்பாக ஒரு கம்பெனி அந்தப் பொருள்களை விற்பதாக இருக்கும். இன்னொன்று வாங்குவதாக இருக்கும். இப்படி தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகை பொதுமக்களுக்குக் கிடைக்கிறதா என்றால் இல்லை. ஆகவேதான் இந்த சலுகை மின்சார போர்டு சம்பந்தமாக வேண்டுமானால் இருக்கட்டும். தனியார் கம்பெனிகளுக்கு இருப்பதை ரத்துசெய்துவிடலாம் என்பது என் திருத்தம். இதற்குக் காரணம் என்ன என்று கனம் அமைச்சர்

அவர்கள் சமாதானம் கூறினுல், அது நியாயமானதாக இருந்தால் நான் இப்போது இந்தத் திருத்தத்தை கூட வற்புறுத்த விரும்ப வில்லை. ஆகவே நான் இபபோது இந்தத் திருத்தத்தை பிரேரேபிக்கிறேன்.

ரெவின்யூத் துறையில் 16—5—1961-ம் தேதியிட்ட 2083-ம் எண்—

(1) (அ) "அல்லது தனியார்" என்னும் வார்த்தைகளேயும், அரசாங்க ஆணையில் வெளியிட்ட திருத்தத்தின் விளக்கத்தில்— (ஆ) (ii) இனத்தையும் விட்டுவிடவும். மேலும், (iii)-ம் இனத்தை (ii)-ம் இனம் என்று மறுபடியும் இலக்கமிடவும்."

* THE HON. SRI R. VENKATARAMAN : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்தச் சலுகை மின்சார போர்டுக்கோ மின்சார அன்டர்டேகிங்சுக்கோ கொடுத்தது அல்ல. எலெக்டிரிகல் குட்ஸ் உற்பத்தி செய்கிறுர்களே அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சலுகை. இப்போது இருக்கிற முறைப்படி நம் ராஜ்யத்திலுள்ள மின்சார போர்டு, மின்சார அன்டர்டேகிங்ஸ் கம்பெனிகள் கல்கத்தாவில் இருந்தோ, பம்பாயில் இருந்தோ எலெக்ட்ரிகல் குட்ஸ் வாங்கினுல் 1 சதவிகிதம் சென்டிரல் டாக்ஸ் மட்டும்தான் கட்ட வேண்டும். ஆனுல் நமது ராஜ்யத்திலே உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரப் பொருள்களே வாங்குவதானுல் மெட்ராஸ் சேல்ஸ் டாக்ஸ் ஆக்ட்படி 6 சத விகிதம் விற்பனைவரி கட்டவேண்டியிருக்கிறது. ஆகவே அதற்காக நமது மின்சார போர்டு உள்பட என்ன செய்கிறுர்கள் என்றுல் சுலபமாகக் கல்கத்தா, பம்பாயில் இருந்து வாங்கிவிடுகிறுர்கள். ஒரு சத விகிதம் சென்ட்ரல் டாக்ஸ் கட்டிவிட்டு, ஒரு சதவிகிதம் டிரான்ஸ் போர்ட் சார்ஜ் பண்ணி சாமான்களேத் தருவித்துவிடுகிறுர்கள். நமது ராஜ்யத்தில் தொழில் வளரவேண்டுமென்று, மூலதனம் போட்டு, நாமும் உதவி கொடுத்து இங்கே மின்சாரப் பொருள்கள் உற்பத்தி செய்கிறபோது இவர்களுடைய பண்டங்கள் விற்பனை ஆகமுடியாத நிலைமை உண்டாகிவிடுகிறது. இதனுல் இங்கே மின்சாரப் பொருள்களே உற்பத்தி செய்யவேண்டுமென்று ஆரம்பித்த தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. ஆகவேதான் இந்தத் தொழில் வளரவேண்டும் என்பதற்காக, இவர்கள் பொருள் விற்பனையாகவேண்டும் என்பதற்காக, 2 சதவிகிதம் என்று வரியை மாற்றியமைத்தோம். அப்படிக் குறைக்காதுபோனுல் பம்பாய், கல்கத்தாவில் இருந்தே ஏராளமாக எலெக்ட்ரிகல் குட்ஸ் வந்து கொண்டிருக்கும். அதைத் தடுத்து நிறுத்த இதைச் செய்தோம். மின்சார போர்டுக்கு இந்தச் சலுகையைக் கொடுத்துவிட்டு தனியார் அன்டர்டேகிங்சுக்கு கொடுக்காமல் இருப்பது ஒரு தொழிலிலேயே டிஸ்க்ரிமினேட் செய்வதாக இருக்கும் என்பதனுல் தான் தனியார் இனத்திற்கும் கொடுத்தோம். ஒருவருக்கு நாம் சலுகை கொடுத்து மற்றொருவருக்குச் சலுகை கொடுக்காமல் இருப்பது சரியாகாது. இதன் காரணமாகத்தான் நாம் அப்படிச்

செய்தோம். இதனால் மின்சார நட்ஸ் உற்பத்தி செய்கிறவர்களுக்கு, அந்தத் தொழில்களுக்குத்தான் நன்மை என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்தத் திருத்தத்திற்கு அவசியம் இல்லையென்று கருதுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : நம் ராஜ்யத்தில் மின்சாரப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படவேண்டும், அந்தப் பண்டங்கள் விற்பனையாவதற்குத் தக்க சூழ்நிலையை உண்டாக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதை ஆதரிக்கிறேன். அதே சமயத்தில் மின்சார போர்டுக்குக் கொடுக்கப்படுகிற சலுகையை வரவேற்கிறேன். தனியார் கம்பெனிகளுக்கு கொடுப்பதுபோல பொதுமக்கள் வாங்கக்கூடிய பொருள்களுக்கும் ஏன் இந்தச் சலுகை விஸ்தரிக்கப்படக்கூடாது என்று கேட்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : பொதுமக்கள் வாங்கக் கூடியது ஸ்விச், பல்பு போன்ற சிறு சாமான்கள்தான். அதுவும் சொந்த உபயோகத்திற்காக வாங்கக் கூடியவை. ஆனால் கம்பெனிகள் ஹெவி குட்ஸ்—டிரான்ஸ்பார்மர் போன்றவைகள் வாங்குகிறார்கள். அதுவும் தென் சென்னை மின்சார விஸ்தரிப்புக் கம்பெனி பல இடங்களுக்கு இப்போது மின்சாரத்தை விஸ்தரிப்பதுபோல பல இடங்களில் விஸ்தரிப்புவேலை நடைபெறுகிறது. இந்தமாதிரி விஸ்தரிப்புக்காரியங்கள் செய்கிற பெரிய கம்பெனிகளுக்கு மின்சாரபோர்டுக்குக் கொடுத்திருப்பதுபோல கொடுத்திருக்கிறோம். அவ்வளவுதான்.

The amendments were, by leave, withdrawn.

V.—GOVERNMENT BILL.

THE MADRAS LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) BILL, 1960 (L.A. BILL NO. 8 OF 1960) AS AMENDED BY THE JOINT SELECT COMMITTEE—*cont.*

SRI A. GOVINDASAMY : சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுகின்ற சட்டம் சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பிரேரேபிக்கப்பட்டு, பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டு, இந்த அவையிலே இப்போது சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படுகிற நேரத்தில் நாம் எதிர்பார்த்த அளவு விவசாயிகளுக்கு, நிலம் இல்லாத ஏழைகளுக்கு, நிலம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்கனவே தெரிவித்த பிரகாரம் இப்போது அரசாங்கம் கொண்டுவந்திருக்கிற சட்டமுறைப்படி கிடைக்குமா என்ற சந்தேகம்தான் ஏற்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே நிலத்திற்கு உச்சவரம்பு கட்டி, ஏழை விவசாயிகளுக்கு நன்மை செய்ய கொண்டு வந்திருக்கிற சட்டமா அல்லது மிராசுதார்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற முறையில் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டமா என்று சந்தேகிக்க வேண்டிய